Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10


# ஈழநாடு

மலர் 7 EELA NADU இதழ் 86

National Tamil Daily தேசிய தினசரி

(8-5-65)

விசுவாவசு சித்திரை 26 முஹர்ரம் பிறை 6 சனிக்கிழமை




# இரு மந்திரிகள் இன்று விஜயம்

## பல இடங்களையும் நேரில் சென்றுபார்க்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், சனி

**தேசியமய சேவைகள் மந்திரி திரு. வி. ஏ. சுகததாசாவும் தொழில் வீடமைப்பு மந்திரி ஜனாப் எம். எச். முகமதுவும் இன்றுகாலை 9 மணியளவில் பலாலி விமான நிலையத்தில் வந்திறங்குவர். யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் அழைப்பின் மீது யாழ்ப்பாணம் வரும் இரு மந்திரிகளுடன் திரு. பொன்னம்பலமும் அதே விமானத்தில் வருவார்.**

ஞாயிற்றுக்கிழமை மாலைவரை யாழ்ப்பாண பகுதியில் பல இடங்களுக்கும் சென்று பார்வையிடவிருக்கும் இருமந்திரிகளுக்கும் பல இடங்களிலும் வரவேற்பளிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

"மந்திரிகள் இருவரும் யாழ்ப்பாணம் எம். பி. யும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தலைவருமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் அழைப்பின் மீது வருகிறார்கள். யாழ்ப்பாணத் தொகுதியில் செய்யவேண்டிய சில முக்கிய திட்டங்கள்பற்றி அப்பகுதிகளை நேரில் பார்த்து அதற்கான நடவடிக்கை எடுக்க செய்யும் பொருட்டே அவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குப் பொதுவரவேற்பளிப்பதற்காக அவர்கள் அழைக்கப்படவில்லை. அவர்களாக உத்தியோக ரீதியிலும் இங்கு வரவில்லை" என்று காங்கிரஸ் காரியதரிசிகளில் ஒருவரான புரக்டர் சங்கரப்பிள்ளை விளக்கம் தெரிவித்தார்.

இன்று காலை 9 மணிக்கு விமான நிலையத்தில் வந்து சேரும் இரு மந்திரிகளும் அங்கிருந்து மயிலிட்டி வழியாக காங்கேசன் துறைக்கு அழைத்துச் செல்லப்பட்டு காங்கேசன் துறைமுகத்தையும் அங்கு அவசியம் செய்யப்படவேண்டிய வேலைகள் பற்றியும் அறிந்து கொள்வார்கள்.

காங்கேசன்துறையிலிருந்து மந்திரிகளிருவரும் யாழ்ப்பாணம் கச்சேரிக்குச் சென்று அங்கு நடைபெறும் மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்வர். பிற்பகல் ஒரு மணிக்கு மந்திரிகளிருவருக்கும் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் நண்பகல விருந்தளிப்பார். பிற்பகல் நான்கு மணிக்கு மந்திரிகள் குருநகர் வீடமைப்புத் திட்ட பகுதிக்குச் சென்று பார்வையிடுவதுடன் ரெக்கிளமேசன் சனசமூகநிலைய முதலாவது ஆண்டுவிழாவிலும் வரவேற்பிலும் கலந்துகொள்வர். பின்னர் மாலை 6 மணியளவில் யாழ்ப்பாணம் முஸ்லிம்லீக் சார்பில் அளிக்கப்படும் வரவேற்பில் கலந்துகொள்வர். யாழ்ப்பாணம் ஐந்து சந்தியிலிருந்து மந்திரிகளிருவரும் ஊர்வலமாக ஜின்னா மைதானத்துக்கு அழைத்துச் செல்லப்படுவர்.

ஞாயிற்றுக்கிழமை காலை, பாலையூர், கொழும்புத்துறை, பண்ணை, நாவாந்துறை ஆகிய இடங்களுக்குச் சென்று பார்வையிடுவர். நாவற்குழியில் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு வீடமைப்புத் திட்டப் பகுதியையும் இவர்கள் சென்று பார்வையிடுவர்.

மாலையில் உடுப்பிட்டிக்குச் சென்று அங்கு அளிக்கப்படும் வரவேற்புகளிற் கலந்துகொண்டபின் கொழும்புக்குப் பிரயாணமாவார்கள்.

## கொழும்பில் பேய் மழை

### பலர் வீடிழந்தனர்

கொழும்பு, வெள்ளி

நாட்டின் தென்மேற்கு பகுதியில் இன்று காலை 8 1/2 மணியுடன் முடிவடைந்த சுமார் 24மணி நேரத்தில் பெரு மழை பெய்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

கொழும்பில் 7 அங்குல மழை பெய்திருக்கிறது. களுத்துறை, அவிசாவலை போன்ற இடங்களில் 6 அங்குல மழையும், கேகாலையில் 8 அங்குல மழையும் பெய்திருக்கிறது.

கொழும்பில் பெருமழை ஏற்பட்டதால், பலர் வீடிழந்தனர் பல வீடுகள் சேதமடைந்துவிட்டன.

கொழும்பு மேயர் திரு. வின்சன்ட் பெரேரா சொந்த முறையில் அழிவு பற்றி மதிப்பீடு செய்து வருகிறார்.

இன்று பிற்பகல் 5000 அகதிகளுக்கும், இரவு 8000 பேருக்கும் உணவு அளிக்கப்பட்டது.

சேதமடைந்த வீடுகளை உடன் திருத்த அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

வனாத்தமுல்லை, மாளிகாவத்தை, புளுமெண்டல் வீதி சேர்ந்த இடங்களில் பலசேதங்கள் ஏற்பட்டுள்ளன.

தற்காலிக தங்கும் வசதிகள் பலவிடங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

தேவையானால் நிவாரண நடவடிக்கை எடுக்கத் தயாராக இருப்பதாக சமூகசேவைத்துறை அதிபர் அறிவித்திருக்கிறார்.

## ஆயிரம்ரூபா அபராதம்

கொழும்பு, வெள்ளி

வெங்காயத்தைக் கூடுதலான விலைக்கு விற்றதாக கேகாலையைச்சேர்ந்த வியாபாரி ஐ. வி. பிள்ளை மீது குற்றஞ்சாட்டி தொடரப்பட்ட வழக்கில், கொழும்பு தெற்கு மாஜிஸ்டிரேட் திரு. எல். செல்லையா ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

இப்படியான சமூகத்திற்கு எதிரான நடவடிக்கைகளை பொறுக்கமுடியாதென நீதிபதி தீர்ப்பளிக்கும்போது கூறினார்.

## கொள்ளைக் கோஷ்டி பொலிஸாரிடம் சிக்கியது

யாழ்ப்பாணம், வெள்ளி

கடந்த வருடம் நவாலியில் உள்ள வீடொன்றில் புகுந்து கொள்ளையடித்த வாலிபர் கோஷ்டிபொன்று தற்செயலாகப் பொலிஸாரிடம் சிக்கியுள்ளது.

ஒரு வருடத்திற்கு முன் அவர்கள் திருடிய சாமான்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இவ்வாலிபர் கோஷ்டியைச் சேர்ந்த ஒருவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளாரென்றும் அறியப்படுகிறது.

கடந்த சிலவாரங்களாக இப்பகுதியில் திருடர் தொல்லை அதிகரித்துள்ளதால் ஆனைக்கோட்டைப் பொலிஸார் இத் திருடர்களைக் கண்டுபிடிப்பதில் அதிக கவனஞ்செலுத்தி வருகிறார்கள்.

## நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறியது

யாழ்ப்பாணம், வெள்ளி

நல்லூர்கிராமசபையின் தலைவர் திரு. கே. எஸ். செல்லையாவின் மீது கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் இன்று நடந்த விசேஷ கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்திற்கு யாழ். உதவி உள்ளூராட்சி அதிபர் திரு. மாணிக்கவாசகர் தலைமைவகித்தார்.

கூட்டத்திற்கு அங்கத்தவர்கள் சமூகம் கொடுத்திருந்தனர். எட்டுப்பேர்கள் பிரேரணைக்குச்சாதகமாக வாக்களித்தனர். திரு. பொ. நவரத்தினசிங்கம் பிரேரணையை எதிர்த்து வாக்களித்தார். அதன் பின்னர் திரு. கி. துரைசிங்கம் தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

திரு. கே. எஸ். செல்லையா இன்று நடைபெற்ற விசேஷ கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

## தேசிய லொத்தர் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

தேசிய லொத்தர் நேற்று இழுக்கப்பட்டது. அதன் முடிவுகள் வருமாறு:-

1-வது பரிசு
09 S 0811 ரூ. 26.450

2-வது பரிசு
11 F 0070 ரூ 10.580

3-வது பரிசு
02 U 0266 ரூ. 2 645

(2-ம் பக்கம் பார்க்க)

## 105 பேர் பலி

வாஷிங்டன், மே 7

சமீபத்தில் எல்சல்வடோரில் ஏற்பட்ட பூகம்பத்தில் 105 பேர் மாண்டனரென்றும், 1000 பேர் காயமடைந்தனரென்றும் அறிவிக்கப்படுகிறது. மொத்தம் 10 கோடி டாலருக்குச் சேதமேற்பட்டிருக்கின்றதாம்.

கல்கத்தாவில்

## ரூபா 50கோடிசெலவில் வட்டரயில் பாதை

கல்கத்தா, மே7

கல்கத்தாவில் வாகனப்போக்குவரத்து நெருக்கடியைச் சமாளிக்கும்பொருட்டு நகரைச் சுற்று வட்டவடிவமாக ரயில் பாதை அமைப்பது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது. [illegible] ...ளது.

உங்கள் கட்டிடங்கள் உறுதியாக இருப்பதற்கு

திறமான

★ இரும்புச் சாமான்களும்
★ பெயின்டுவகைகளும்
★ அஸ்பஸ் சீட்டுகளும்
★ மர வகைகளும்

எம்மிடம்

பெற்றுக்கொள்ளலாம்.

விஷ்ணு

ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்

வல்வெட்டித்துறை

டயரும்ஸ்

தேவை

கைத்தறி நெசவாளர்

மேற் குறிப்பிட்ட பதவிகளுக்கு பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்

1. கனிஷ்ட பாடசாலைத் தராதரப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.
2. இருவருட அனுபவமுள்ளவர்களாக இருக்க வேண்டும்
3. வர்ண (Design) வேலையில் தகுதி வாய்ந்தவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

"டயரும்ஸ்" 54, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

மூவரிக்கு 12-5-65 புதன்கிழமைக்கு முன்னதாக நேரில் விண்ணப்பிக்கவும்.

தங்குவதற்கு விடுதி வசதியுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணி வாக்கு

கடவுள் கருணைக்கடல். அவர் தண்டிப்பதில்லை. நம்மை நாமே தான் நமது தவறுகளைத் தண்டித்துக் கொள்ளுகிறோம். கடவுளே நம் மூலம் இயங்குகின்றாரென்பதை உணர்ந்தால் நாம் தவறு செய்ய மாட்டோம். கடவுளை மறக்கும் போதே நாம் தவறு செய்கிறோம்.

— சுவாமி ராமதாஸ்

ஈழநாடு

EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna. Telegrams: "EELA NADU" Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு சித்திரை மீ 26 உ (8-5-65)

## இருமந்திரிகளின் வருகை

தேசிய அரசாங்கத்தின் இரு மந்திரிகள் இன்று யாழ்ப்பாணப் பகுதிக்கு விஜயம் செய்கின்றனர். தங்கள் கடமையை உணர்ந்து இங்குவரும் மந்திரிகள் இப்பகுதி மக்களின் கஷ்ட நஷ்டங்களையும் சரியாக அறிந்து செல்லும் வாய்ப்புக் கிடைக்கவேண்டும்.

சென்ற சில வருடங்களாக இலங்கையின் வடபகுதி புறக்கணிக்கப்பட்ட ஒரு பகுதியாகவே கருதப்பட்டு வந்துள்ளது. இங்குள்ள மக்களும் இந்நாட்டு மக்கள் தான். அவர்களும் இதர பகுதி மக்களைப் போல வாழவேண்டியவர்கள். நாட்டின் பல பகுதிகளுக்கும் நேரில் சென்று மக்களின் குறைகளை அறிந்து அவற்றை நீக்க முயற்சிசெய்த முன்னுள் மந்திரிகள் வடபகுதிக்கு நேரில்வந்து மக்களின் குறைகளை அறிந்து கொள்ள முடியாத சூழ்நிலை துரதிர்ஷ்டவசமாக இருந்து வந்தது. அச்சூழ்நிலையை மாற்றவும் அவர்கள் சிரத்தைகாட்டவில்லை. மந்திரிகள் மக்களின் தொண்டர்கள் என்பதையும் சிலர் மறந்து விடுவதுண்டு. மக்களும் மந்திரிகளைத் தங்கள் தொண்டர்கள் எனக் கருதாமல் எஜமானர்கள் என்று தவறான கருத்துக் கொண்டுள்ளனர். இது மக்களின் தவறல்ல. அந்நிய ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட இந்தமனப்பான்மை மாற வேண்டும்.

வடபகுதியில் வாழும் மக்களுக்கு குறைகள் நிறையவுண்டு. போக்குவரத்து வசதிக்குறைவு, வீதிகளின் சீர்கேடு, சுகாதாரக் குறைவு, குடியிருப்புக் கஷ்டம், வேலையில்லாத்திண்டாட்டம் முதலிய கஷ்டங்கள் இப்பகுதி மக்களை நீண்ட காலமாக வாட்டி வருகின்றன. இவை போதாதென்று சமீபத்தில் வீசிய சூறாவளி மேலும் பல இன்னல்களை ஏற்படுத்தி விட்டுச் சென்றுள்ளது. மந்திரிகளுக்கு மகஜருக்கு மேல் மகஜர் அனுப்பியும் தூதுகோஷ்டிகள் சென்று பேட்டி கண்டும் இதுவரை வாக்குறுதிகள் தான் கொடுக்கப்பட்டு வந்துள்ளனவேயொழிய செயலில் எதுவும் நிறைவேறவில்லை. இந்நிலையில் இங்கு மந்திரிகள் நேரில் வருவது இப்பகுதி மக்களின் கஷ்ட நஷ்டங்களைக் கண்டறிந்து கொள்ளவும் அதன் மூலம் குறைகளை நீக்கவேண்டிய அவசியத்தை உணர்ந்து கொள்ளவும் உதவிபுரியலாம்.

காங்கேசன்துறைத் துறைமுகத்தை விருத்தி செய்வதன் மூலம் கொழும்புத் துறைமுகத்தில் ஏற்படும் நெருக்கடியையும் வீணை தாமதத்தையும் நீக்க முடிவதுடன் இங்கு பலருக்குவேலைவாய்ப்புக் கிடைக்க வாய்ப்புக் கிடைக்குமென்று பல தடவைகளில் பலரும் எடுத்துக்காட்டி வந்துள்ளனர். இப்பொழுதும்கூட காங்கேசன் துறையில் ஒரு உணவுக் கப்பல் வந்துள்ளது. துறைமுகத்தில் வசதிக்குறைவிருப்பினும் இங்குள்ள தொழிலாளர்கள் கொழும்புத்துறைமுகத் தொழிலாளரைவிடத் துரிதமாக இரசுமதி வேலையைச் செய்கின்றனர் என்று இங்குள்ள அரசாங்க அதிகாரிகளே பாராட்டியுள்ளனர். எனவே துறைமுகத்தை விருத்தி செய்வதனமூலம் இங்குள்ளவர்களுக்கு மட்டுமல்ல நாட்டுக்குமே நலன் கிடைக்கும்.

இன்றுவரும் தேசிய சேவை சன்மய மந்திரியும் தொழில், வீடமைப்பு மந்திரியும் இங்கு பல இடங்களுக்கும் நேரில சென்று பார்வையிடவிருக்கின்றனர். பார்வையிடுவதுடன் நிற்காது துறைமுகவிருத்தி, வேலை வாய்ப்புவசதி, குடியிருப்புத்திட்டங்கள் ஆகியவை பற்றி நன்கு அறிந்து ஆராய்ந்து விரைவில் அவற்றைச் செயலில் நிறைவேற்ற ஆவன செய்ய வேண்டும். கடமையைச் செய்யவருள் இவ்விரு மந்திரிகளையும் பின்பற்றி பிரதமரும் இதர மந்திரிகளும் இங்கு அடிக்கடிவந்து மக்களின் குறைகளை நேரில் கண்டறிந்து அவற்றை நீக்கும் வரை இறை [illegible] இங்கு பொதுமக்கள் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்.

## சங்கத்தானை கந்தசாமி ஆலயம்

சாவகச்சேரி, வெள்ளி

சாவகச்சேரி பகுதியில் மிக புராதன ஆலயங்களில் ஒன்றாகிய சங்கத்தானை கந்தசுவாமி ஆலயத்தின் திருப்பணி வேலைகள் 65 உறுப்பினர்களைக்கொண்ட ஒரு திருப்பணி மகாசபையின் மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவ்வேலைகளை மேற்கொள்ளுமுகமாக கடந்த முதல் திகதி நடைபெற்ற மகாசபைக் கூட்டத்தில் பின்வரும் 7 பேர்களைக் கொண்ட ஒரு செயல் சமிட்டி நிறுவப்பட்டது தலைவர்: திரு. ஞா. முருகேசு, செயலாளர், திரு. வே. இ. சண்முகம், தனாதிகாரி: திரு. சி. தர்மலிங்கம். திருவாளர்கள் செ. யோகீஸ்வரன், கா. இராமலிங்கம், மு. பஞ்சாபிகேசன், சி. கந்தையா ஆகியோர் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

## வேலைவாய்ப்புகள்

### முதலாளிமார் சம்மேளனம் முயற்சி

பம்பலப்பிட்டி, வெள்ளி

இலங்கை முதலாளிமார் சம்மேளனம் தனது அங்கத்தவர்களிடம் அவர்களது ஸ்தாபனங்களின் வேலை வாய்ப்புகளை இன்னும் அதிகரிக்கக் கூடிய வழிமுறைகள் பற்றி விரிவான தகவல் தருமாறு கேட்டுள்ளது.

தனியார் துறையில் இன்னும் பலருக்கு வேலை வாய்ப்புகளை அளிக்க அரசாங்கம் கொண்டிருக்கும் திட்டத்திற்கு உதவுமுகமாகவே இவ்விதம் மேற்படி சம்மேளனம் முயற்சி மேற்கொண்டுள்ளது.

இன்னும் 5 வருடங்களில் எத்தனை பேருக்கு வேலை கொடுக்கவியலுமென்றும் தமக்கு தெரிவிக்குமபடி சம்மேளனம் தனது அங்கத்தவர்களைக் கேட்டுள்ளது.

## அதிகாரிகளின் அசிரத்தையால் பஸ் சேவை சீர்கேடு

### பிரயாணிகள் சங்கம் மந்திரிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், சனி

வடமாகாணத்திலுள்ள மற்றும் பஸ் டிப்போக்கள் சிறந்த முறையில் பிரயாணங்களுக்கு திருப்தியளிக்கும் வகையில் சேவை செய்யும்போது, யாழ்ப்பாணம் கிழக்கு டிப்போ சீர்கேடான நிலையில் இருக்கிறது. இதற்குக் காரணம் கிழக்கு டிப்போவிலுள்ள நிர்வாக அதிகாரிகளின் கவனக்குறைவும் அசிரத்தையுமே.

தென் யாழ்ப்பாண பஸ்பிரயாணிகள் சங்கம், தேசிய சேவை மந்திரி திரு. வி. ஏ. சுகததாசாவிற்கு சமர்ப்பிக்கவிருக்கும் மகஜரொன்றில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது. இந்த மகஜரை தென் யாழ்ப்பாண பஸ்பிரயாணிகள் சங்கத் தலைவர் திரு. சி. எம். சண்முகநாதன், தேசிய சேவை மந்திரியிடம் சமர்ப்பிப்பார்.

அடுத்த தடவை மந்திரி யாழ்ப்பாணம் வரும்பொழுது, தங்கள் சங்கத்தைச் சேர்ந்த கோஷ்டியொன்றிற்கு மந்திரியை பேட்டி காணச் சந்தர்ப்பம் அளிக்கும்படியும், அல்லது கொழும்பில் பேட்டி காணச் சந்தர்ப்பம் அளிக்கும் படியும் அந்த மகஜரில் கேட்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

யாழ்ப்பாணம் கிழக்கு பஸ் டிப்போ திருப்திகரமற்ற பஸ் சேவையை கடந்த காலந்தொட்டு நடாத்தி வருகின்றது. பிரதேச ரீதியில் இக்குறைபாடுகள் பற்றி பல தடவை பேசியும் எதுவித பயனும் ஏற்படவில்லை. இங்குள்ள மற்றடிப்போக்கள்சிறந்தமுறையில்சேவை செய்துவரும்வேளையில் யாழ்ப்பாணம் கிழக்கு டிப்போ மட்டும் தான் மோசமாக நடந்து வருகிறது. இதற்கு அங்கு கடமையாற்றும் நிர்வாக உத்தியோகத்தர்களே காரணம்.

சேவை செய்வதற்கு போதியளவு பஸ்கள் இருந்த போதிலும் திருப்திகரமான சேவை நடைபெறவில்லை.

மாதாந்த டிப்போ கவுன்சில் கூட்டங்களிலும், பஸ் பிரயாணிகள் சங்கங்கள் கலந்து கொள்ளும் ஆலோசனைக் கூட்டங்களிலும் பஸ் சேவையை சீராக்க பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட போதிலும் இவை இதுகாலவரை அமுல் நடத்தப்படவில்லை. இதனால் பிரயாணிகளுக்கு நாளுக்கு நாள் கஷ்டங்கள் அதிகரித்து வருகின்றதேயன்றி குறையவில்லை.

பஸ் பிரயாணிகளின் வேண்டுகோளும், அவர்களுக்கு அதிகாரிகளால் அளிக்கப்படும் வாக்குறுதிகளும் என்றுமே நிறைவேற்றப்படாமல் பேச்சளவில் மட்டுமே இருந்து வருகின்றது.

போதியளவு தொழிலாளர்கள் இருக்கும் வேளைகளில் பஸ்கள் கிடையாது போதியளவு பஸ்கள் இருக்கும் போது தொழிலாளர்கள் இருக்கமாட்டார்கள். இந்தக் குறை நீக்கப்படவேண்டும்.

இரட்டைத்தட்டு பஸ் ஓடுவதற்கு பயிற்றப்பட்ட சாரதிகளை ஒற்றைத்தட்டு பஸ் ஓடுவதற்கு விடுவதால் இரட்டைத் தட்டு பஸ்கள் சேவையில் ஈடுபடாமல் நிற்கின்றன. இதற்கும் இதுவரை முடிவு காணப்படவில்லை. இக்குறைகளை எல்லாம் தீர்க்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

---

கொழும்பு, வெள்ளி

இலங்கை போக்குவரத்துச் சபையின் திறமையான நிர்வாகத்தினால் வருமானம் தினமும் 8,000 ரூபா அதிகரித்துள்ளது. பிரயாணச் சீட்டுக்களில் நடக்கும் மோசடிகளை திருத்த [illegible] இன்ஸ்பெக்டர்கள் கோஷ்டி கண்டுபிடித்துள்ளது.

## ஆக்கிரமிப்பைக் காட்டும் சினிமாப்படம்

பெர்லின், மே7

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் டெவா பிலிம் படப்பிடிப்பு நிலையம் 'வெறுக்கத் தக்க யுத்தம்' என்ற சினிமாப்படத்தை எடுத்து முடித்துள்ளது. இந்தப் படம் வியட்நாமில் அமெரிக்க ஆக்கிரமிப்புக் கெதிராக வேண்டுகோள் விடுக்கிறது.

வியட்நாம் மக்களுக்கெதிராக நடத்தப்படும் யுத்தத்தின் அட்டூழியங்களின் காட்சிகள் இப்படத்தில் அடங்கியுள்ளன. வியட்னும் மக்களின் வீரத்தைக் காட்டும் காட்சிகளும் இதில் இடம் பெற்றுள்ளன.

## தேசிய சுவீப்

(1-ம் பக்க தொடர்ச்சி)

தலா ரூ. 182,25 பெறும் 100 டிக்கெட் விபரம்:

| | | |
|---|---|---|
| 05 J 0704 | 05 T 0153 | 07 R 0226 |
| 08 S 0232 | 05 F 0526 | 04 Q 0774 |
| 02 J 0073 | 01 K 0449 | 10 B 0893 |
| 03 H 0442 | 10 X 0471 | 01 Y 0852 |
| 05 H 0407 | 06 Z 0161 | 07 P 0364 |
| 10 P 0336 | 03 A 0773 | 03 F 0093 |
| 01 D 0008 | 01 R 0778 | 06 B 0622 |
| 09 K 0709 | 05 B 0289 | 10 W 0445 |
| 08 G 0157 | 05 K 0435 | 09 H 0534 |
| 05 B 0938 | 05 Y 0854 | 06 V 0237 |
| 07 D 0821 | 01 B 0516 | 06 O 0678 |
| 05 D 0765 | 07 X 0304 | 08 F 0215 |
| 06 V 0190 | 03 P 0813 | 05 E 0839 |
| 06 L 0129 | 07 J 0717 | 07 B 0967 |
| 07 W 0273 | 05 E 0117 | 01 F 0390 |
| 09 J 0796 | 11 K 0294 | 11 D 0013 |
| 02 Q 0489 | 02 U 0459 | 08 K 0417 |
| 02 N 0706 | 11 Z 0231 | 08 T 0652 |
| 05 K 0978 | 02 M 0982 | 08 M 0625 |
| 11 J 0112 | 03 N 0166 | 03 V 0622 |
| 05 Y 0768 | 02 T 0869 | 06 Z 0304 |
| 04 Y 0267 | 09 D 0979 | 08 C 0034 |
| 06 M 0942 | 10 C 0549 | 01 A 0629 |
| 07 X 0126 | 08 P 0686 | 03 V 0390 |
| 09 J 0184 | 08 D 0830 | 08 X 0046 |
| 01 C 0077 | 07 Q 0971 | 06 T 0971 |
| 01 Z 0415 | 07 Q 0670 | 01 F 0263 |
| 04 F 0300 | 08 X 0208 | 05 E 0194 |
| 09 S 0344 | 08 W 0458 | 04 O 0345 |
| 05 X 0411 | 10 A 0107 | 03 Y 0924 |
| 11 E 0107 | 03 K 0326 | 01 C 0829 |
| 02 W 0026 | 07 S 0464 | 09 Q 0133 |
| 06 K 0827 | 05 X 0600 | 07 W 0608 |
| | | 03 S 0070 |

(5-ம் கலத் தொடர்ச்சி)

சிரித்த முகம். பால்வடிகின்றது. எவ்வளவு தேஜஸ்! இலங்கையைப் பற்றி எல்லாம் ஆர்வத்துடன் விசாரித்தார்கள். கடல் கடப்பது பாவமா? என்று கேட்டதற்கு, அவர் சிரித்துக்கொண்டே, இந்தியாவின் கரையை ஒட்டியே இலங்கையும் இருப்பதால் இலங்கை செல்வதில் அவ்வளவு தோஷமில்லை என்றும் தெய்வத்தை மனதில் உண்மையாக நினைத்தால் எவ்வித பாபமும் நீங்கிவிடுமென்ற வாக்கு உண்மை என்றும், தாங்கள் நடத்தும் சமஸ்கிருத பரீட்சைக்கு இலங்கையிலுள்ள மாணவர்களும் எழுத முன்வருவதைப் பற்றிப் பாராட்டிக் கூறி, அதில் ஏற்பட்டிருந்த தடைகளை நீக்க ஒழுங்கு செய்துள்ளதாகவும் தெரிவித்தார்கள்.

புதுப் பெரியவாளாவது இலங்கைக்கு விஜயஞ்செய்ய வேண்டுமென்று கேட்டதற்கு அவர் புன்னகை பூத்தார். ஜகத் குருவான சுவாமிகளோ அவரது அதிகாரம் பெற்றவர்களோ பாடல்பெற்ற ஸ்தலங்களுள்ள நம் இலங்கைக்கு வரப்படாதா? அந்தப் புனித நாள் எந்நாளோ!

* * *

எல்லா உலகமுமானாய் நீயே
யேகம்பமேவியிருந்தாய் நீயே, நல்லாரை நன்மை
அறிவாய் நீயே ஞானச்சுடர்
விளக்காய் நின்றாய் நீயே,
பொல்லா வினைகளறுப்பாய்
நீயே புகழ்ச் சேவடியென்
மேல் வைத்தாய் நீயே,
செவ்வாய செல்வந் தரு
வாய் நீயே திருவையாறகலாத செம்பொற் சோதீ.

— அப்பர் அடிகள்

## ஐயாறன் எழுதுவது

"வருடம் ஒருமுறையாவது எல்லாரும் கதிர்காமத்துக்குச் செல்ல வேண்டும், உற்சவ காலத்தில்தான் செல்ல வேண்டுமென்பதில்லை, வசதிப்பட்ட போது செல்லலாம். கஷ்டமெல்லாம் தீர்ந்துவிடும்" என்று காஞ்சிகாமகோடி பீடாதிபதியான ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் சென்னையிலிருந்து இலங்கை மக்களுக்கு விடுத்த விசேஷ ஆசிச் செய்தியில் குறிப்பிட்டார்கள்.

மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு வார்த்தை சொல சற்குருவும் வாய்க்குமென்பது பெரியோர் வாக்கு. ஆனால் அவ்வித வாய்ப்பு பல்லாண்டுகளாக நம்மில் பலருக்கும் கிடைக்க முடியவில்லை, சென்னை எழும்பூரிலே "தர்மபிரகாஷ்" என்ற அழகான நிலையத்திலே சுவாமிகள் எதிர்பாராதமுறையில் முகாம்செய்ததை அறிந்ததும் அவரைத் தரிசிக்க ஆவலுடன் சென்றேன்.

அதிகாலை 4 மணி முதலே அவரை தரிசிக்க குடும்பம் குடும்பமாக மக்கள் வருகின்றார்கள். வெளியிலே டெம்பரரியாகவைத்துள்ள பல புஷ்பக் கடைக்காரர்களுக்கும நல்ல வியாபாரமாம். விதவிதமான வாசமலர்கள் நறுமணம் வீசுகின்றன.

சென்னையிலே "நால பிரகாஷ்" என்ற பிரபல ஹோட்டலின் சொந்தக்காரர் தான் "தர்மபிரகாஷ்" என்ற அந்தப் பெரிய மாளிகையையும் கட்டியுள்ளார், எல்லா வசதிகளும் கூடிய அந்த இடத்தில் பெரிய விவாகங்கள் நடக்குமாம். பெரிய கல்யாண மண்டபம், விசாலமான தாழ்வாரம், மச்சின்மது பல அறைகள். சமையல் செய்ய எல்லாவித வசதிகள். விவாகத்துக்காக வாடகைக்கு விடப்படினும், சுவாமிகள் முகாம் செய்ய அது இலவசமாகவே அளிக்கப் பட்டதாம்.

ஆயிரக்கணக்கில் மக்கள் கூடி பூஜையைப் பார்க்கவும், சுவாமிகளைத் தரிசித்து, அவரது ஆசியைப் பெறவும் மிக வாய்ப்பாக இருக்கது அந்த மாளிகை, சமூகநன்மைக்கான அவ்வித வசதியான இடத்தை இலங்கையில் கண்டதில்லை,

* * *

காலை 5 மணிக்கு கோ (பசு) பூஜை. கஜ (யானை) பூஜை. சுவாமிகள் வெளிவந்து பூஜையின்போது பசுவையும் யானையையும் அன்புடன் தட்டிக் கொடுத்தார்கள், மங்கள வாத்தியமான மேளம் ஒலிக்கிறது;

சுவாமிகள் செல்லுமிடமெல்லாம் மக்களும் அவரைப் பின்தொடர்ந்து சூழ்ந்து கொள்ளுகின்றார்கள். நமஸ்கரித்துத் தங்கள் கஷ்டங்களைத் தெரிவிக்கின்றனர், ஒவ்வொருவர் கூறுவதையும் மிக சாந்தமாகக் கேட்டு ஆறுதல் கூறுகின்றார் அந்த நடமாடும் தெய்வம். பளுவான மனங்கள் பல சாந்தி பெறுகின்றன. இளம் பிள்ளைவாதத்தால் நடக்கமுடியாத ஓர் அழகானபையனை சுமந்துகொண்டுவந்து சுவாமிகளின் திருவடி முன்வைத்தனர், "சுலபமாகக் குணமாகிவிடும்" என்று சுவாமிகள் அன்புடன்கூற அப்பையனுக்கும் அவனது குடும்பத்தாருக்கும் எவ்வளவு மகிழ்ச்சி தெரியுமா!

சுவாமிகளின் தோற்றம் தவமே ஓர் உருவெடுத்து வந்தது போலுள்ளது. அக்கண்களுக்குத்தான் எவ்வளவு ஒளி! அவரைப் பார்த்தாலே பாபம் தீரும்போலுள்ளது. இல்லாவிட்டால் ஏன் அவ்வளவு மக்கள் அவரை இப்படி மொய்த்துக்கொள்கிறார்கள்!

* * *

"இளவரசான" புதுப் பெரியவாளையும் கண்டேன்.

4-ம் கலம் பார்க்க

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பிரிட்டிஷ் உருக்கு தொழில் தேசியமயமாகும்

## 4 அதிகப்படி வாக்குகளால் அரசாங்க மசோதாவுக்கு வெற்றி

### சுகவீனமுற்றவர் அம்புலன்ஸில் வந்து வாக்களித்தார்

லண்டன், மே 7

**பிரிட்டிஷ் உருக்குத் தொழிலைத் தேசியமயமாக்கும் தொழிற்கட்சி அரசாங்கத்தின் மசோதா 4 அதிகப்படி வாக்குகளால் வெற்றிபெற்றது.**

அரசாங்கத்துக்குச் சார்பாக 310 வாக்குகளும் எதிராக 306 வாக்குகளும் கிடைத்தன. லிபரல்கட்சி, கன்சர்வேட்டிவ்கட்சியுடன் சேர்ந்து அரசாங்கத்துக்கு விரோதமாக வாக்களித்தது.

இந்த வாக்கெடுப்பில் கலந்து கொள்ளும்பொருட்டு சுகவீனமுற்ற எம். பி.க்களும் சபையில் ஆஜராகியிருந்தனர். ஒரு எம். பி. அம்புலன்ஸ் வாகனத்தில் கொண்டுவரப்பட்டார்.

கன்சர்வேட்டிவ் கட்சி பதவிக்கு வந்தால் மீண்டும் உருக்குத் தொழிலை சொந்தக்காரர்களிடம் ஒப்படைக்கும் என மசோதாவை வன்மையாக எதிர்த்த எதிர்க்கட்சி எம். பி.க்கள் கூறினர்.

தொழிற்கட்சி அரசாங்கம் மிகப்பெரிய இந்தச் சோதனையிலிருந்து தப்பியது முக்கிய விஷயம்.

இதற்கிடையில் பர்மிங்ஹாம் தொகுதியில் நடைபெற்ற இடைத்தேர்தலில் கன்சர்வேட்டிவ் அபேட்சகர் ஒருவர் வெற்றிபெற்றிருக்கிறார். இத்தொகுதியில் தொழிற்கட்சியின் பலம் சென்ற தேர்தலைவிடக் குறைந்திருக்கிறது.

## நேரு-ரஸ்க் சந்திப்பு

வாஷிங்டன், மே 7

வாஷிங்டனில் இந்திய ஸ்தானிகர் திரு. பி. கே. நேரு அமெரிக்க வெளிநாட்டு மந்திரி திரு. ரஸ்கைச் சந்தித்து ஒரு மணி நேரம் சம்பாஷித்தார். கட்ச் நிலைமைபற்றி அவர் விவாதித்தார். பாகிஸ்தான் அமெரிக்க டாங்கிகளை சண்டையில் உபயோகித்தது என்பதற்குச் சந்தேகமில்லை என நிருபர்களிடம் அவர் கூறினார்.

—

## மக்காவில் 283000 யாத்ரீகர்

மக்கா, மே 7

இவ்வாண்டு மக்கா யாத்ரீகர்களின் எண்ணிக்கை 2,83,000த்தைத் தாண்டியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. பாகிஸ்தானிலிருந்து தான் அதிக யாத்திரிகர்கள் சென்றிருக்கிறார்களாம். 26,000 பாகிஸ்தானியர் இவ்வாண்டு மக்கா யாத்திரையை மேற்கொண்டனர்.

—

## தென் வியட்நாமில் சிவிலியன் ஆட்சி

சைகோன், மே 7

தென்வியட்நாமில் உயர் ராணுவ அதிகாரிகளைக் கொண்ட பாதுகாப்பு சபை கலைக்கப்பட்டுவிட்டது. இச்சபை கடந்த டிசம்பரில் நிறுவப்பட்டது.

இப்போது ஆட்சிப்பொறுப்பு முற்றும் சிவிலியன்கள் கைக்கு வந்துவிட்டது.

—

## டொமினிக்கனில் 10 அமெரிக்கர் பலி

சாந்தாடொமிங்கோ மே 7

டொமினிக்கனில் நேற்று அமெரிக்கப் படைகளுக்கும் கிளர்ச்சிப் படைகளுக்குமிடையே ஏற்பட்ட கைகலப்பில் 10 அமெரிக்கர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

அமெரிக்கத் துருப்புக்கள் கிளர்ச்சிக்காரரின் இலக்குகளுக்குள் ஊடுருவியபோது இச்சம்பவம் ஏற்பட்டது.

இவ்வித ஊடுருவல் ஓ. ஏ. எஸ். யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீறிய செயலெனக் கிளர்ச்சித் தளபதி கர்னல் கமானோ கூறினார்.

அமெரிக்கத் தலையீட்டை நிறுத்த உதவுமாறு அவர் பிரெஞ்சு அதிபர் டிகாலுக்கும் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

டொமினிக்கனில் அமெரிக்கத் தலையீட்டை எதிர்த்து 6000 பேர் நேற்று ஆர்ப்பாட்டஞ்செய்தனர். பொலிஸார் மீது அவர்கள் குண்டுகளை வீசினர்.

பெரு, சிலி ஆகிய நாடுகளிலும் அமெரிக்கவிரோத ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

தென் ரொடீஷியா

## ஒருதலைப்பட்ச சுதந்திர பிரகடனத்தை நிறுத்துக"

### பிரிட்டனுக்கு பாதுகாப்புசபை கோரிக்கை

நியூயோர்க், மே 7

தென்ரொடீஷியாவில் மைனாரிட்டி வெள்ளையர் அரசாங்கம் ஒருதலைப்பட்சமாக சுதந்திரப் பிரகடனம் செய்வதைத் தடுக்கும்படி பாதுகாப்புச் சபை பிரிட்டனைக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

11 பேர் அடங்கிய சபையில் பிரிட்டன் அமெரிக்கா பிரான்ஸ் ரஷ்யா ஆகிய நான்கு நாடுகளைத் தவிர மிகுதி 7 நாடுகளும் இத்தீர்மானத்துக்குச் சாதகமாக வாக்களித்தன.

தென் ரொடீஷியாவில் இன்று பொதுத்தேர்தல் நடைபெறுகிறது. அங்குள்ள அரசியல் நிலைமை ஒருதலைப்பட்ச பிரகடனத்திற்கு வழிகுலப்பதாய் இருப்பதாயும் பெரும்பான்மையினரான கறுப்பர்கள் தேர்தலைப் பகிஷ்கரித்திருப்பதாயும் தெரிகிறது.

தென் ரொடீஷியாவின் அரசியல் நிலைமை குறித்து ஆட்சேபம் தெரிவிக்கு முறையில் அங்குள்ள இந்தியத் தூதர் வாபஸ் பெறப்பட்டிருக்கிறார்.

## பிரிட்டிஷ் பிரதமரின் முயற்சி பற்றி சாஸ்திரிநம்பிக்கை

புதுடில்லி, மே 7

கட்ச் எல்லை சம்பந்தமாக பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன் மேற்கொண்டிருக்கும் சமாதான முயற்சி வெற்றி பெறும் எனத் தாம் நம்புவதாக இந்தியப் பிரதமர் சாஸ்திரி கூறினார்.

மவுண்ட்பேட்டன் பிரபுவுக்கு நேற்றிரவு அளிக்கப்பட்ட விருந்தில் பேசியபோதுதான் அவர் இவ்வாறு கூறினார்.

மவுண்ட்பேட்டன் பிரபுவின் நினைவு இந்தியாவில் என்றும் பசுமையாக இருக்கும் என்றும் அவர் பாராட்டுத் தெரிவித்தார். மவுண்ட்பேட்டன் பிரபு இதற்குப் பதிலளிக்கையில் இந்தியாவுக்கு சகல சுபிட்சமும் ஏற்படும் என நம்புவதாக் கூறி, காலஞ்சென்ற நேரு இந்தியாவின் எதிர்காலத்திற்குச் சரியான பாதை அமைத்துக் கொடுத்திருப்பதாய் பாராட்டுத் தெரிவித்தார்.

## டில்லியில் வியட்னாம் உப பிரதமர்

புதுடில்லி, மே 7

தென்வியட்னாம் உதவிப்பிரதமர் 4 நாள் இந்திய விஜயத்தை மேற்கொண்டிருக்கிறார். வியட்னாம் பிரச்னைகளில் இந்தியா ஆற்றி வரும் சேவையை அவர் பாராட்டினார்.

—

## பம்பாயில் சிங்கப்பூர் பிரதமர்

பம்பாய், மே 7

சிங்கப்பூர் பிரதமர் திரு. லீகுவான்யூ பம்பாய் வந்திருக்கிறார்.

—

கிழக்கு பெர்லின், மே 7

ரஷ்யப் பிரதம மந்திரி திரு. கோஸிஜின் நேற்று கிழக்கு பெர்லின் வந்துசேர்ந்தார்.

## தொழுகைக்கு சென்றவர் காயம்

புதுடில்லி, மே 7

திரிபுரா கிராமம் ஒன்றில் பாகிஸ்தான் துருப்புக்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது தொழுகைக்குச்சென்று கொண்டிருந்த ஒரு இந்திய முஸ்லிம் காயமடைந்ததாய் அறிவிக்கப்பட்டது.

—

## அசோக்மேத்தா

மாஸ்கோ, மே 7

4-ம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ரஷ்யா உதவி பெறுவது பற்றி திட்டக்கமிஷன் உபதலைவர் திரு. அசோக்மேத்தா ரஷ்யத் தலைவர்களுடன் பேச்சுக்களைத் தொடங்கியிருக்கிறார்.

—

## சிர்சன் 201, லாரி 210, கூப்பர் 102; அவுட் இல்லை

### ஆஸ்திரேலியாவின் அபார துடுப்பாட்டம்

4-ம் கிரிக்கட் டெஸ்ட்

பிரிட்ஜ்டவுன், மே 7

ஆஸ்திரேலியாவுக்கும் மேற்கிந்தியத் தீவுகளுக்குமிடையே இங்கு நடைபெற்றுவரும் 4வது கிரிக்கெட் டெஸ்ட்டில் இரண்டாம் நாளான நேற்று ஆட்ட இறுதிவரை ஆஸ்திரேலியா 2 விக்கெட் நஷ்டத்திற்கு 583 ரன்கள் எடுத்தது.

சிம்ஸன் 201 ரன்களும், லாரி 210 ரன்களும் எடுத்தார்கள். இத்தொடர்ச்சியில் இரட்டை செஞ்சரி எடுத்தவர்கள் இதுவரை இவர்கள் மட்டுமே. இப்போது கூப்பர் 102 ரன்களும் ஓநீல் 29 ரன்களும் எடுத்து அவுட்டாகாமலிருக்கிறார்கள். இருவரும் இன்று தொடர்ந்து ஆடுவார்கள்.

382 ரன்கள் எடுத்தபோது தான் ஆஸ்திரேலியாவின் முதலாவது விக்கெட் விழுந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

## "சீனா-பாகிஸ்தான் உறவு இந்தியாவுக்கு விரோதமல்ல"

### லண்டனில் பூட்டோ பேட்டி

லண்டன், மே 7

இந்தியாவுடன் எல்லாத் தாவாவை அமைதியாகத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பதே பாகிஸ்தானின் நோக்கம் என பாக். வெளிநாட்டுமந்திரி திரு. பூட்டோ இங்கு கூறினார்.

பாகிஸ்தான் அண்டை நாடுகளுடன் நேசஉறவு கொள்ள விரும்புகிறதென்றும் சமாதான அடிப்படையிலேயே சீனாவுடன் நட்புக் கொண்டிருக்கிறதென்றும் பாகிஸ்தான்—சீனா ஆகிய இருநாடுகளுக்குமிடையே பலநூற்றுக்கணக்கான மைல் எல்லை இருக்கிறதென்றும் அவர் கூறினார்.

சீன—பாகிஸ்தான் நட்புறவு இந்தியாவுக்கு விரோதமானதல்ல என்றும் குறிப்பிட்டார். ஆனால் சீனாவோ அல்லது ரஷ்யாவோ பாகிஸ்தான் மீது ஆதிக்கம் செலுத்தமுயன்றால் பாகிஸ்தான் அதை எதிர்க்குமென்றும் அவர் கூறினார்.

கட்ச் நிலைமைபற்றி அவர் குறிப்பிடுகையில் வெற்றி தோல்வி யாருக்கு என்ற பிரச்னை அங்கு எழவில்லை. எல்லாரும் சமாதானம், நீதியின் வெற்றியே முக்கியம் என்றும் பூட்டோ குறிப்பிட்டார்.

—

## செனட் அங்கீகாரம்

வாஷிங்டன், மே 7

டொமினிக்கன் குடியரசு, வியட்னாம் ஆகிய நாடுகளுக்கும் ஜனாதிபதி கோரிய 70 கோடி டாலர் மேலதிக உதவியை அமெரிக்க செனட் அங்கீகரித்தது. ஏற்கனவே கீழ்சபை அங்கீகரித்துவிட்டது.

—

## பகைநாகர் சுட்டதில் ஒருவர்பலி

கொஹிமா, மே 7

இம்பாலுக்கருகே பகை நாகர் துப்பாக்கிப் பிரயோகம்செய்ததால் ஒரு இந்திய பொலிஸ் வீரர் மாண்டார். இந்தியப் பொலிசார் திருப்பிச் சுட்டபோது நாகர்கள் காட்டுக்குள் மறைந்துவிட்டனர். உடனடியாக மேலும் துருப்புக்கள் அனுப்பப்பட்டன.

## டொமினிக்கன் ஓட்டெடுப்பு ஒத்திவைப்பு

நியூயோர்க், மே, 7

டொமினிக்கன் குடியரசில் தலையிட்டதற்காக அமெரிக்கா மீது கண்டனம் தெரிவிக்க வேண்டும் என்றும், அமெரிக்க துருப்புக்கள் அங்கிருந்து வாபஸ்பெற வேண்டும் என்றும் பாதுகாப்பு சபையில் ரஷ்யா கோரிய தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

டொமினிக்கனில் அமெரிக்க ராஷ்டிரங்களின் ஸ்தாபனம் (ஓ. ஏ. எஸ்.) என்ன செய்கிறது என்பதை அங்கத்தினர்கள் அவதானிக்குமாக இந்த ஒத்திவைப்பு நடைபெற்றது. [illegible] சம்மதித்திருக்கிறது.

## பாகிஸ்தானில் பங்குமார்க்கட் விலைகள் வீழ்ச்சி

### எல்லைத்தாக்குதல் காரணமாம்

புதுடில்லி. மே 7

பாகிஸ்தான் போர் வெறியைத் தூண்டிவிட்டதனால் அந்த நாட்டுக்கே தீங்கு ஏற்பட்டிருக்கிறதென்று இங்கு கூறப்படுகிறது.

சென்றமாதம் 24-ம் திகதி 84-ம் இலக்கில் இந்தியநிலை மீது அவர்கள் தாக்கியதைத் தொடர்ந்து அங்கு பங்கு மார்க்கெட் விலைகள் வீழ்ச்சியடைந்துவிட்டன.

பாகிஸ்தான் தீவிர பிரசாரம் செய்தபோதிலும் பியர் பேட்டில் அதற்கு பெருஞ்சேதம் ஏற்பட்டது என்ற உண்மை பாகிஸ்தான் மக்களுக்குத் தெரிந்துவிட்டதே இதற்குக் காரணமாம். அங்கு பங்கு மார்க்கெட் விலைகள் வீழ்ச்சியடைந்துவிட்டதாகப் பல பாகிஸ்தான் பத்திரிகைகள் விபரம் தெரிவித்திருக்கின்றன.

—

வாஷிங்டன், மே. 7

சர்வதேச உபகார நிதி ஸ்தாபனத்தின் 10 நாடுகள் பிரிட்டனுக்கு 50 கோடி பவுன் உதவியளிக்க முன்வந்துள்ளன.

## எதிர்க்கட்சி முயற்சி தோல்வி

கான்பரா, மே. 7

தென்வியட்னாமுக்கு ஆஸ்திரேலியத் துருப்புக்கள் அனுப்பப்படுவதை நிறுத்த எதிர்க்கட்சியினர் பார்லிமெண்டில் மேற்கொண்ட முயற்சி தோல்வியடைந்தது. அரசாங்கத்துக்கு 16 அதிகப்படி வாக்குகளால் இவ்விஷயத்தில் வெற்றி கிடைத்தது.

—

## ஏலத்தில் 7,00,000 தோல்கள்

லீப்சிக், மே 7

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் சர்வ தேசியத் தோல் ஏலம் ஆரம்பமாகியுள்ளது. 17 ஐரோப்பிய நாடுகள் இந்த ஏலத்தில் பங்குபற்றின. நரி, கீரிப்பிள்ளை, இந்தியப் புலி, நீர்நாய் முதலிய மிருகங்களின் தோல்கள் சுமார் 7 லட்சம் ஏலத்தில் விடப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பாரதி சனசமூக நிலைய நிர்வாகிகள்

காங்கேசன்துறை, வெள்ளி

மாவிட்டபுரம் பாரதி சனசமூக நிலையத்தின் ஒன்பதாவது ஆண்டு நிறைவுவிழா திரு. இ. மு. நாகலிங்கம் தலைமையில் நடைபெற்றது. புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

போஷகர் திரு நா. தம்பையா. உபபோஷகர் திரு. தா. வைரவப்பிள்ளை, தலைவர் திரு. இ. மு. நாகலிங்கம். செயலாளர் திரு. அ. செல்வராஜா. துணைச் செயலாளர் திரு. வி. சரவணமுத்து. தனாதிகாரி திரு. வி செல்லத்துரை. திருவாளர்கள் மு. முத்துலிங்கம், பொ. சுப்பிரமணியம் ஆகியோர் நிர்வாகசபை உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

## திருக்குறள் மகாநாட்டிற்கு ஏற்பாடு

கிளிநொச்சி, வெள்ளி

திருக்குறள் மகாநாட்டுக் குழுவின் நிர்வாகசபைக் கூட்டம் கிளிநொச்சியில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஜூன் 11, 12, 13-ம் திகதிகளில் நடைபெறவிருக்கும் திருக்குறள் மகாநாட்டை மிக விமரிசையாக நடாத்தும் ஒழுங்குகள் ஆராயப்பட்டன. கிளிநொச்சி முற்றவெளி மைதானத்திலேயே விழாப்பந்தல் அமைத்து நடாத்துவதெனவும் வேண்டிய காரியங்களை கவனிக்கவும் தனித்தனி குழுக்கள் தெரிவுசெய்யப்பட்டன. விழாவிற்கு வரும் வெளியூரவர்களுக்கு வசதிகள் செய்து கொடுப்பது முதலான வேலைகளைக் கவனிக்க இளைஞர்களைக் கொண்ட ஓர் தொண்டர்படை அமைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## ஆஸ்பத்திரிகளின் நிர்வாக மாற்றம்

பம்பலப்பிட்டி, வெள்ளி

கொழும்பில் உள்ள இரு பெரிய சிகிச்சை நிலையங்களின் நிர்வாகம் திருத்தி அமைக்கப் படவிருக்கின்றது. இதற்கான உத்தரவை சுகாதார மந்திரி திரு. எம். டி. எச் ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

கார்ஸில் வீதியில் உள்ள பிரசவ ஆஸ்பத்திரியிலும், லேடி. டி' சொய்சா ஆஸ்பத்திரியிலும் இப்பொழுது பிரசவத் தாய்மார்களும், இனவிருத்தி உறுப்புகள் சம்பந்தப்பட்ட நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. ஆனால் மந்திரியின் புதிய திட்டப்படி ஜூலை மாதம் முதல் திகதியிலிருந்து கார்ஸில் வீதியில் உள்ள ஆஸ்பத்திரியில் இனவிருத்தி உறுப்புகள் சம்பந்தப்பட்ட வியாதிகளுக்கு மட்டுமே சிகிச்சை அளிக்கப்படும். லேடி. டி' சொய்சா ஆஸ்பத்திரியில் பிரசவத் தாய்மார்களுக்கு மட்டுமே சிகிச்சை அளிக்கப்படும். இப்புதிய முறையில் பிரசவத் தாய்மார்களும், மற்றும் நோயாளிகளும் குறிப்பிட்ட நாட்களில் அல்லாது தினமும் சிகிச்சை பெறலாம்.

## 'ஒன்றுசேர வேண்டும்'

பேராதனை, வெள்ளி

'இந்த நாட்டிலுள்ள எல்லா ஜனநாயகக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து, ஜனநாயகத்திற்கு மாறான மார்க்ஸிஸத்தை முற்றாக ஒழிக்கபாடுபட வேண்டும் என்று யட்டிநுவர எம்.பி. திரு. அனில் அபயசுந்தரா கடுகண்ணாவ நகரசபை கூட்டத்தில் பேசும் போது கூறினர்.

## பனிக்கட்டியை உருக்கும் "கலப்புச்சாலை"

பாட், மே. 7

குளிர்காலத்தில் சாலைகளில் படியும் பனிக்கட்டியை அகற்றுவதற்குப் புதிய முறை ஒன்றை மேற்குஜெர்மனியில் கண்டுபிடித்திருக்கிறார்கள். "சூடாகும் சாலையை அமைப்பதுதான் இந்தமுறை. தேவையான நீளஅகலத்தில் கடினமான பிளாஸ்டிக் பாய்களைத் தயாரிக்கிறார்கள். இந்தப் பாய்களுக்குள் உஷ்ணம் உண்டாக்கும் மின்கம்பிகள் வைத்து எல்லாவற்றையும் உள்ளடக்கி 'பேக்லைட்' என்ற குழம்பினால் அதற்கு மேற்பூச்சுக்கொடுக்கிறார்கள். இந்தப் பிளாஸ்டிக்பாய் தண்ணீரில் நனையாது; கெடாது. குளிர்காலத்தில் இந்தப் பாய்களை சாலைகளின் மேலாக விரித்துவிடுகிறார்கள். மின்சாரம் பாய்ந்து பாயில் எப்போதுமே கணப்பு இருந்துகொண்டே இருக்குமாதலால், சாலையில் உறையும்பனி உடனுக்குடன் உருகி சாலை எப்போதும் சுத்தமாக இருக்கிறது. ஜெர்மனியில் குளிர்காலத்தில் முக்கியமான எல்லா இடங்களிலும் இந்தக் "கணப்புச்சாலை"கள் அமைக்கப்படுகின்றன.

## நாட்டின் நலனுக்கு உழைக்க வேண்டும்

காங்கேசன்துறை, வெள்ளி

'இந்த நாட்டின் பிரஜைகள் இன மதபேதமின்றி ஒன்றுபட்டு நாட்டின் நலனுக்காக உழைக்க வேண்டும். விளையாட்டுத்துறையில் இப்போது ஏற்பட்டுள்ள இந்த ஒற்றுமையை வளர்ப்பது அனைவரதும் கடமையாகும்'' என்று தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணி காங்கேசன்துறை கிளைச் செயலாளர் திரு.சோ. கனகராஜா காங்கேசன்துறையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும் போது குறிப்பிட்டார்.

மேதின விழாவையொட்டி வாலிபமுன்னணிக் கிளையினர் விளையாட்டுப் போட்டியும் பொதுக் கூட்டமும் நடத்தினர். மாணவர்களும் தொழிலாளர்களும் கலந்து கொண்ட கிரிக்கட் போட்டி நேரம் போதாமையினால் இடையில நிறுத்தப்பட்டது. தொழிலாளர் கோஷ்டி 116 ஓட்டங்களும், மாணவர் கோஷ்டி 115 ஓட்டங்களும் எடுத்தது.

பின்னர் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில திரு. விஜயசோமா பேசுகையில் 'வாலிபர்கள் நாட்டின் முதுகெலும்பு போன்றவர்கள் என்றும எந்த வகையிலும் வேற்றுமையை வளரவிடாது ஒற்றுமைக்காகப் பாடுபடவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

திரு. கே. தாமோதரம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திருவாளர்கள் செல்வராசா, பெர்னண்டோ, சிறிசேனு, கு. தனபாலசிங்கம் ஆகியோரும் பேசினர்.

## கி. ச. சமாசத்தின் முயற்சி

யாழ்ப்பாணம், வெள்ளி

வவுனியா மாவட்ட கிராம சபை சமாசம் வவுனியா நகர சபை எல்லைக்குள் கிராமசபை மண்டபமும், கிராமசபைத் தலைவர்கள் தங்குவதற்கான மண்டபமும் கட்டுவதற்கு தீர்மானித்துள்ளார்கள். அதற்கான ஆரம்பவேலைகளும் நடைபெற்று வருவதாகத் தெரிய வருகிறது. இக்கட்டடத்திற்கு ஒவ்வொரு கிராமச்சபையும் தங்கள் வரிப்பணத்திலிருந்து ரு 3500 செலவுப் பணமாக கொடுக்க வேண்டும். இக் கட்டிட வேலை முடிவடைய [illegible] வரை [illegible] மென நம்பப்படுகிறது.

## 'குறைபாட்டைத் தெரிவியுங்கள்'

யாழ்ப்பாணம், வெள்ளி

கிராமசபை களின் முன்னேற்றத்திற்கு அத்தியாவசியமான மின்சார விநியோகம், தண்ணீர் விநியோகம், முடிக்குரிய காணிகளை சுவீகரித்தல், கிராமசபை வட்டாரங்களைப் பிரித்தல் முதலான விஷயங்களை கிராமசபைகள் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்தும் ஒருவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாத விஷயங்களை தங்கள் சமாஜத்துக்கு அறிவிக்கும்படி யாழ் மாவட்ட கிராம சபைத் தலைவர் திரு ஏ. ஜி. இராஜசூரியர் கிராம சபைத் தலைவர்களுக்கு அனுப்பிய கடிதத்தில் கோரியுள்ளார்.

இந்த விபரங்கள் அனைத்தையும் சேகரித்து உள்ளூராட்சி அமைச்சருக்கு மகஜர் ஒன்றை சமர்ப்பிக்க யாழ், மாவட்ட கிராமசபைத் தலைவர்கள் சமாஜம் தீர்மானித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

## புதிய உத்தியோகஸ்தர்கள்

அல்வாய், வெள்ளி

சிவல் தொழிலாளர் சங்கக் கூட்டம் அல்வாய்வடக்கு அரசடிப் பிள்ளையார் கோவில் வீதியில் திரு. க. கிருஷ்ண பிள்ளை தலைமையில் நடைபெற்றது. நடப்பு வருடத்திற்குரிய உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்கள் திருவாளர்கள் சி. கணேசன். சி. வேலுப்பிள்ளை. காரியதரிசிகள் திருவாளர்கள் வ. முருகேசன், சி. அம்பிகாபதி. பொருளாளர் திரு. மு. கதிரவேலு. 11 பேர் கொண்ட நிர்வாகத்தினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## பிரயாணிகள் கஷ்டம்

மன்னூர், வெள்ளி

கடந்த புதன் கிழமை மன்னூரிலிருந்து யாழ்ப் பாணத்திற்கு காலை 9-45 மணிக்குப் புறப்படும் பஸ் பழுதடைந்தகாரணத்தினால் மன்னூரிலேயே தங்கிவிட்டது. காலை 9 மணி தொடக்கம் பகல் 2 மணி வரையும் யாழ்ப்பாணம் போகவேண்டிய சுமார் 100 பிரயாணிகள் பஸ் நிலையத்திலேயே தங்கவேண்டிய நிலை ஏற்பட்டது, பஸ் நிலையத்தில் தங்குமிடமில்லாத காரணத்தால் ஐந்து மணிநேரம் அகோரவெப்பத்துக்குள் அவதிப்பட்டனர்.

## காரியதரிசிக்கு பாராட்டு

வல்வெட்டித்துறை, வெள்ளி

வல்வெட்டித்துறைப் பட்டினசபையின் மாதாந்தக் கூட்டம் தலைவர் திரு க. சபாரத்தினம் தலைமையில் நடைபெற்றபோது அங்கு காரியதரிசியாகக் கடமையாற்றி வவுனியா நகரசபைக்கு மாற்றலாகிச் செல்லும் திரு எஸ். சிவப்பிரகாசத்திற்கு பாராட்டுத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. பாராட்டுப் பிரேரணையை நாலாம் வட்டார அங்கத்தவர் திரு சி. நவரத்தினம் பிரேரிக்க இரண்டாம் வட்டார அங்கத்தவர் திரு பி. வேலும்மயிலும் ஆமோதித்தார்.

## பொன்னம்பலம்வீதி

வல்வெட்டித்துறை, வெள்ளி

அல்வாய் உப தபாற்கந்தோருக்கு அருகாமையிலுள்ள காந்தியூருக்கு செல்லும் 'பொன்னம்பலம் வீதியை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவரும் யாழ்ப்பாணம் எம். பி. யுமான திரு ஜீ.ஜீ. பொன்னம்பலம் திறந்து வைத்தார்.


தங்கமுலாம் பூசப்பட்ட கவர்ச்சிகரமான

**சவரின் வளையல்கள்**

ஈந்துவருடம் உத்தரவாதம் பெற்றவை




உண்மையான தங்க நகைகளுக்கு நிகரானது. அழகிலும் உருவஅமைப்பிலும் சவரின் தங்கநகைகளுக்கு ஒப்பானது. சகல வைபவங்களுக்கும் உபயோகிக்கக்கூடிய வகையில் நவீன உருவ அமைப்புக் கொண்டவை. தங்கமுலாம் பூசப்பட்ட சவரின் வளையல்கள் பற்றிய எங்களின் நிபந்தனைகள்:- உத்தரவாதமளிக்கப்பட்ட குறிப்பிட்ட கால எல்லைக்குள், நிறம் மற்றும் சகல வளையல்களும் கட்டணம் எதுவுமின்றி மீண்டும் தங்கம் பூசிக்கொடுக்கப் படும். எங்களால் பொறுப்பேற்கப்படும் ஆடர்கள் வி. பி. பி. யில் அனுப்பிவைக்கப்படும்.

M 43, M 39, M 41, M 36, M 3, M 35
M 37, M 36, M 40, M 46, —
எந்த ஜோடி உருவ, அமைப்புக்கொண்ட
ஒரு ஜோடியின் விலை ரூபா 5-00

M 42 ஜோடி ரூ. 6-00, M 30 ஜோடி ரூ. 7-00 M31 ஜோடி ரூ. 8-50. M 27 ஜோடி ரூ. 12-50, M 32 ஜோடி ரூ. 12-50, M 49 ஜோடி ரூ. 15-00. M 29 ஜோடி ரூ. 15-00 M 47 ஜோடி ரூ. 18-50.

**ஈ. பிரான்சிஸ் பெரேரா அன்ட் கம்பனி**

12, யட்டிநுவர வீதி, கண்டி.





குதூகல வாழ்வுக்கு மார்க்கம் நல்ல ஆரோக்கியமே!

இதை அளிக்கிறது

**நேத்திராலோகதைலம்**

இது பீனிசம், தடிமன், நரம்புவலி போன்றவியாதிகளிலிருந்தும் தலையிலும் கண்களிலும் ஏற்படும் எல்லாவித வருத்தங்களிலிருந்தும் உங்களை பாதுகாக்கிறது.

நேத்திராலோகத் தைலம் கண்களுக்கு இதமளித்து தலைக்கு குளிர்மையளித்து பொடுகு, இளநரை ஆகியவை ஏற்படாமல் தடுத்து கூந்தலை ஆரோக்கியமுடன் நீண்டு வளரச் செய்கிறது.

தினசரி நேத்திராலோக தைலத்தை பாவியுங்கள்.

½ போத்தல் ரூ. 3/- தபால் செலவுசதம் /-55.

வி. பி. பி. ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

இலவச ஆலோசனைகளுக்கு தினசரி காலை 8-30 மணியிலிருந்து மாலை 4-30 மணிவரை டாக்டர் ஒருவர் இருப்பார்.



★

டப்ளியூ. கே. ஜினதாஸ,
ஆயுர்வேத வைத்தியர்,
161, நோரிஸ் ரோடு,
கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல பாடசாலைகள் பங்குபற்றும் கர, வலைப்பந்தாட்டப் போட்டி

மீசாலை, வெள்ளி

அகில இலங்கை சிரேஷ்ட கனிஷ்ட் கரபந்தாட்டமும் வலைப்பந்தாட்டப் போட்டியும் புரட்டாசி மாதம் 3-ம், 4-ம் திகதிகளில் யாழ்ப்பாண விளையாட்டுத் திடலில் நடைபெறவிருக்கின்றன.

இப்போட்டிகளில் இலங்கையிலுள்ள சகல பாடசாலைகளும் கலந்துகொள்ளவிருக்கின்றன. மாவட்ட உடற் பயிற்சிப்போட்டிகளில் வெற்றியீட்டிய பாடசாலைகள் மாத்திரம் இப்போட்டிகளில் பங்குபற்றும் உரிமை இருக்குமென அறியப்படுகிறது.

இலங்கையின் பலபகுதிகளிலிருந்தும் 92 பாடசாலைகள் பங்குபற்றவிருக்கும் இப்போட்டிகளில் 1600 மாணவர்கள் பங்குபற்றுவார்கள் என அறியப்படுகிறது.

இந்தப் போட்டிக்கான ஆயத்தங்கள் அனைத்தும் வடபிரதேச வித்தியாதிபதியின் தலைமையின் கீழ் ஓர் உபசபை மூலம் நடைபெறுமெனவும் இந்த உபசபையின் முதற்கூட்டம் நாளை நடைபெறுமென்றும் தெரியவருகிறது.

## விளையாட்டுப் போட்டி

வவனியா, வெள்ளி

வவனியா — முல்லைத்தீவு — மன்னார் மாவட்டங்களில் 1965ம் ஆண்டின் தேகப் பயிற்சியும் விளையாட்டுப் போட்டியும் இம்மாதம் நடைபெறும். ஒவ்வொரு வட்டார வித்தியாதிகாரியின் இடங்களிலும் போட்டிகளை வவனியா-மன்னார் உடல் பயிற்சி வித்தியாதரிசி திரு வே. தங்கராசா நடத்துவார். இறுதியில் வெற்றிபெறும் பாடசாலைகளும், மாணவர்களும் வவனியாவில் நடைபெறும் மாவட்டப் போட்டியில் கலந்து கொள்ளலாம்'

இம் மாதம் 26 ம் திகதி காலை முல்லைத்தீவு மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் முல்லைத்தீவு வட்டார பாடசாலைகளின் போட்டிகள் நடைபெறும்.

இம் மாதம் 27-ம் திகதி மன்னார் முருங்கன் வட்டாரப்போட்டிகள் நடைபெறும். இப்போட்டிகளில் வெற்றி பெறும்பாடசாலைகளும் மாணவர்களும் அடுத்த மாதம் 4ம், 5ம் திகதிகளில் நடைபெறும் மாவட்ட போட்டிகளில் பங்குபற்ற உரிமையுடையவராவார்கள். இறுதிமாவட்டப் போட்டி வவனியா தமிழ் மகாவித்தியாலய விளையாட்டுத் திடலில் நடைபெறும்.

## நிர்வாகிகள்

ஊரெழு, வெள்ளி

ஊரெழு கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள் தலைவர் திரு ச. கதிரவேலு, செயலாளர் திரு க. வை. தனேஸ்வரன், பொருளாளர் திரு இ. பொன்னுத்துரை. ஒன்பது பேரைக் கொண்ட நிர்வாகசபைக்குழு ஒன்றும் அக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டது.

REGAL — JAFFNA
NOW SHOWING
YUL BRYNNER
TONY CORTIS
in
TARAS BULBA
(Panavicion - Color)

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) ராஜ் (நீர்கொழும்பு)
லக்ஷ்மி (ரத்னபுரி) விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி)
விஜிதா (ஹட்டன்) தீவோலி (நுவரேலியா) ஜுப்பிட்டர் (குருநாகல்)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி மாலை 6-30, 9-30



எம். ஜி. ராமச்சந்திரன்
சாவித்திரி
மற்றும் பலர் நடித்த
வேட்டைக்காரன்

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

**சனி 8-5-65**

(செய்திகள்: காலை 7-15 பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00.)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 மெல்லிசை, 7-45 தோத்திரஇசை, 8-15 இஸ்லாமிய பாடல்கள்.

பகல் 12-00 திரைகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரைப்பட இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வாரசாரம், 7-00 பாட்டு — மகாராஜபுரம் வி. சந்தானம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 பேச்சு, 9-30 நாடகம், 10-00 நேயர்விருப்பம்

**ஞாயிறு 9-5-65**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 மெல்லிசை, 7-45 சங்கீதவகுப்பு, 8-00 பௌத்தபிரசங்கம், 8-15 தமிழ் மூலம் சிங்களம், 8-30 ஞானாஞ்சலி, 9-00 முஸ்லிம் ஞாயிறு பாடசாலை, 9-30 கிறிஸ்தவநிகழ்ச்சி, 11-30 சிறுவர் மலர்.

பகல் 12 15 நேயர்விருப்பம், 1-00 மத்தாப்பு.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 பாட்டு — ஜெயலக்ஷ்மி சதாசிவம், 5-45 திரைப்படஇசை.

இரவு 6-15 நாளவாத்தியக் கச்சேரி, 6-45 வீணை, 7-00 பாட்டு, 7-30 நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 மகளிர் விளக்கு, 10-15 தேர்ந்தஇசை.

## கைத்தொழில் சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட கைத்தொழில் சுவீப் முடிவுகள் வருமாறு:-

முதலாம் பரிசு
10 A 0209 ரூ. 28,450
இரண்டாம் பரிசு
02 J 0759 ரூ 8,130
மூன்றாம் பரிசு
11 T 0060 ரூ. 4,060

(5-ம் பக்கம் பார்க்க)

தலா 100ரூபா பரிசுகொண்ட 100 டிக்கட்டுகள்.

| | | |
|---|---|---|
| 02 H 0674 | 01 E 0731 | 03 A 0407 |
| 10 U 0503 | 04 W 0494 | 08 E 0381 |
| 11 A 0022 | 08 C 0461 | 03 I 0454 |
| 09 S 0828 | 10 F 0934 | 10 V 0789 |
| 08 T 0141 | 10 C 0464 | 06 E 0391 |
| 04 Q 0835 | 02 F 0865 | 02 K 0489 |
| 07 M 0792 | 02 Q 0604 | 10 Q 0433 |
| 08 V 0598 | 03 U 0171 | 05 W 0590 |
| 04 G 0463 | 01 D 0669 | 08 B 0989 |
| 02 K 0964 | 09 A 0242 | 06 H 0113 |
| 03 G 0039 | 03 V 0125 | 07 W 0937 |
| 04 J 0467 | 04 J 0039 | 07 Q 0433 |
| 01 S 0834 | 10 N 0734 | 04 G 0419 |
| 07 E 0296 | 09 H 0472 | 05 W 0675 |
| 10 L 0069 | 06 H 0243 | 05 K 0867 |
| 02 I 0063 | 05 A 0416 | 02 B 0253 |
| 07 G 0565 | 05 Z 0499 | 03 H 0526 |
| 03 E 0119 | 03 K 0891 | 03 U 0289 |
| 05 R 0829 | 07 K 0232 | 07 K 0315 |
| 07 C 0587 | 11 I 0031 | 08 X 0269 |
| 07 T 0872 | 08 Y 0478 | 09 Z 0541 |
| 05 K 0949 | 03 C 0708 | 01 D 0763 |
| 04 B 0416 | 01 G 0140 | 09 S 0520 |
| 03 P 0394 | 02 F 0837 | 03 X 0676 |
| 06 X 0449 | 08 I 0784 | 05 Y 0467 |
| 08 M 0320 | 01 I 0312 | 05 X 0943 |
| 01 I 0429 | 03 Y 0503 | 02 Z 0428 |
| 06 Z 0374 | 05 L 0451 | 08 G 0631 |
| 07 E 0122 | 06 H 0067 | 03 K 0371 |
| 01 L 0902 | 07 W 0801 | 02 V 0858 |
| 09 F 0944 | 04 U 0997 | 03 T 0584 |
| 10 R 0047 | 09 Y 0095 | 06 J 0134 |
| 05 L 0711 | 02 H 0102 | 05 Y 0778 |
| | 10 E 0312 | |

கொழும்பு, வெள்ளி

காலஞ்சென்ற டி. எஸ். சேனநாயக்கா, எஸ். டபிள்யு ஆர். டி. பண்டாரநாயக்கா, சர் பாரன் ஜெயதிலகா, போன்ற தேசிய தலைவர்களின் சுயசரிதங்களை பாடசாலை மாணவர்களுக்கு பாடப் புத்தகமாக்க உகள் நிதிமந்திரி திரு. என். எல். விமலசேன தீர்மானித்துள்ளார்.

## யாழ்ப்பாண மாநகரசபை

3-6-1965 கண்பகல 12 மணி வரை மாநகரசபைக்குத் தேவையான மின்சார உபகரணங்களை விநியோகம் செய்வதற்கு முத்திரையிடப்பட்ட கேள்வி விளம்பரங்கள் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்வி விளம்பரங்கள் இரு பிரதிகளில், "மின்சார உபகரணங்களுக்கு கேள்வி விளம்பரம்" என மேல் பக்க மூலையில் எழுதப்பட்ட கடித உறையில் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

கேள்வி விளம்பரக் கட்டுப் பணமாக ரூ. 100/ம், கேள்வி விண்ணப்பங்களுக்குரிய பணமாக ரூ 5/-ம் செலுத்தி 1-5-65 பி. ப.; 2 மணிவரை கேள்வி விளம்பர விண்ணப்பங்களை இக் காரியாலயத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். தெரிவு செய்யப்படும் ஒப்பந்தகாரரின் கேள்வி விளம்பரக் கட்டுப் பணம் ஒப்பந்தம் பூர்த்தியாகும்வரை பாதுகாப்புக்காக சபையினால் வைத்திருக்கப்படும்.

காங்கிறீட் கம்பங்கள் தவிர்ந்த மற்றைய பொருட்களையும் யாழ்ப்பாணம் கொண்டு வருவதற்கான செலவினங்கள் கேள்வியில் சேர்க்கப் படக் கூடாது. ஒப்பந்தகாரர்கள் தங்கள் விபரங்களை 31-12-65 வரை உறுதியாக்கிக் கொள்ள வேண்டும்.

ஒப்பந்தம் ஒன்றையோ அதன் பகுதி ஒன்றையோ ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ சபைக்கு உரிமையுண்டு

ஏ. எச். ஏ. சமி
மாநகரசபை கமிஷனர்
யாழ்ப்பாணம்,
5-5-65. 165

## பயிற்றப்பட்ட தமிழாசிரியர்கள் பட்டதாரிகளாக

### இராமநாதன் கலைக்கழகம் உதவும் வகுப்புகள்

கழக ஆதரவின்கீழ் இவ்வாண்டும் தொடர்ந்து, பொதுக் கலைத் தகுதி காண் (G, A, Q) பரீட்சைக்கான வகுப்புக்கள் 1965 ஜூலை முதல் வாரத்தில் ஆரம்பமாகும், இவ் வகுப்பில் பயில்வோர் 1966-ல் பரீட்சைக்குத் தோற்றலாம்.

இப்பொழுது வகுப்பிலுள்ளவர்கள் தொடர்ந்து பயிலலாம். விண்ணப்பிக்க வேண்டியதில்லை.

B. A. வகுப்பும் நடைபெறும். யாழ். நகரிலும் வகுப்புகள் நடைபெற ஒழுங்குகள் நடைபெறுகின்றன.

இவ் வகுப்புக்களிற் பயில விரும்புவோர் க. கதிரவேல், ஆசிரியர், இணுவில் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்க.

முகாமை முதல்வர்,
சன்னாகம்,
7-5-65. 167

## லெயிடன் லயிட்ஸ் களியாட்டு விழா

ஊர்காவற்றுறை பட்டினசபைக் காரியாலய கட்டிட நிதிக்காக ஓர் களியாட்டு விழாவை 30 நாட்களுக்கு நடாத்த களியாட்டு விழாக்கள் நடத்தும் ஸ்தாபனங்களிடமிருந்து 20-5-65 பிற்பகல் 3-00 மணிவரை எழுத்து மூலம் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். மற்றும் விபரங்களைக் காரியாலயத்தில் அறிந்து கொள்ளலாம்.

வே. சிவசுப்பு,
தலைவர், ப. ச. ஊர்காவற்றுறை.
பட்டினசபைக் காரியாலயம்,
ஊர்காவற்றுறை,
6-5-65 166

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

சரி விளம்பரம்

**விற்பனைக்கு**

கொழும்புத்துறை சாமியார் வீதியில் சுவாமியார் ஆசிரமத்திற்கு மேற்குப் பக்கமாக கிணற்றுடன் கூடிய ஐந்து பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. மு ஆறுமுகம், செட்டியாமடம், வட்டுக்கோட்டை, என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். 240

**நாய்க்குட்டி விற்பனைக்கு**

கலப்பற்ற, ஒன்பது வார வயதுடைய அல்சேஷன் ஆண் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. கறுப்பு, பழுப்பு நிறங்களில் உள்ள இக்குட்டிகளுக்கு புழுக்கடை, உண்ணிக்கடை சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொன்றும் விலை ரூபா 125/- தொடர்பு கொள்க:- இல. 8 இரண்டாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 24

**விற்பனைக்கு**

நல்ல பாவனையிலுள்ள டீசல் என்ஜின் நான்கு சிலிண்டர்கள் ஒரு ஹலர் மோட்டர் பாகங்களுடன் விற்பனைக்குண்டு. விபரத்திற்கு: ராஜா மில்ஸ் துறைமுகவீதி, பருத்தித்துறை 24

கிளிநொச்சியில் இரணமடு குளத்தின்கீழ் 5-ம் வாய்க்காலில் திரமான நீர்ப்பாசன வசதியுள்ள 20 ஏக்கர் வயல் கூடிய விலைக்கு விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: வி. எஸ். பொன்னையாபிள்ளை அன் சன்ஸ், நல்லூர் கந்தசாமி கோவிலடி அல்லது 145 சன்னதி ரோட், அச்சுவேலி. 23

EL 3000 என்னுடைய ஓடும் நிலையில் உள்ள வ... சோல் கார் விலை ரூபா 2500/ 93, சிவன் பண்ணை வடக்கு வீதி, வண்ணார்பண்ணை. 23

தொய்வு, கசம், நீரிழிவு வெள்ளை முதலிய ப... கொடிய வியாதிகள் குணப்படு... த்திய விபரங்கள் அடங்கி... கற்றலோக் இலும், மந்திரிமா... மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சைபெற்று வியக்துள்... னர், வைத்தியர் பசுபூரணானந்தா கைலாசபிள்ளையார்கோவிலடி யாழ்ப்பாணம்.

## 'இழந்த உரிமைகளை... பெறமுடியும்'

—எம். பி...

விட்டத்தல், வெள்...

'இழந்துபோன உரிமைகளை பாதுகாக்க இரத்த... சிந்தியாவது எமது கட்... போராட்டமே செய்யும். நா... இழந்துபோன உரிமைகளை தேசிய அரசாங்கத்தின் மூல... பெறமுடியும் என்ற நம்பிக்கை... யினாலேயே நாம் ஐ. தே. க... சிக்கு ஆதரவு கொடுத்து... னோம்' என்று மன்னார் பா... ளுமன்ற உறுப்பினர் திரு... வி. ஏ. அழகக்கோன் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசும் பொழுது குறிப்பிட்டார்.

கூட்டத்திற்கு திரு. ... துரையப்பா தலைமைவகி... தார்.

தொடர்ந்த திரு அழக... கோன் குறிப்பிட்டதாவது... சுதந்திரக்கட்சியைப் பொறு... தவரையில் நாம் பலமுறை... யும் ஏமாற்றப்பட்டோம். அ... துடன் சுதந்திர கட்சியை ஆதரித்திருப்போமானால் நா... சர்வாதிகாரத்திற்கு வழிவகு... தவர்களாவோம். அக்காரண... தினாலேயே நாம் அவர்களு... டன் சேரவிருக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கடைசி செய்தி**

# யுத்த நிறுத்தம்!

## கட்ச் - ரண் பகுதியில்

வாஷிங்டன், மே 6

நெருக்கடி நிலவும் கட்சின் ரன் பகுதியில் யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ள இந்தியாவும் பாகிஸ்தானும் இணங்கியிருப்பதாக வாஷிங்டனிலிருந்து இன்று அதிகாலை வெளியான செய்திகள் கூறுகின்றன.

இந்தப் பகுதியில் யுத்த நிறுத்தத்திற்கான உத்தரவுகளை இந்தியப் பிரதமர் திரு. லால் பகதூர் சாஸ்திரியும் பாகிஸ்தான் அதிபர் பீல்ட் மார்ஷல் அயூப்கானும் பிறப்பித்திருப்பதாகவும் இந்தச் செய்திகள் அறிவித்தன,

## கராச்சிக்குச் சமீபத்தில் இந்திய யுத்தக் கப்பல்

### பாகிஸ்தான் அறிவிப்பு

கராச்சி, மே 6

கராச்சிக்கு அறுபது மைல் தூரத்தில், பாகிஸ்தான் கடல் பிராந்தியத்தில் இந்தியப் போர்க்கப்பலொன்று ரோந்துவேலையில் ஈடுபட்டதை பாகிஸ்தான் இராணுவத்தினர் கண்டதாக பாகிஸ்தான் அரசாங்கம் இன்று அறிவித்துள்ளது.

இக்கப் போர்க்கப்பல் கடல்பிராந்தியத்தில் அத்து மீறி பிரவேசித்திருப்பதாகவும் பாகிஸ்தான் குற்றம் சுமத்தியுள்ளது.

பாகிஸ்தானின் இந்தப் புகாரை இந்தியா கண்டித்து "அப்பட்டமான முழுப்பொய்" என்று அறிவித்துள்ளது.

## ஜி. ஸி. ஈ. (சாதாரணம்) பரீட்சை முடிவுகள்

### இம்மாதம் 20-ல் வெளியாகும்

கொழும்பு, வியாழன்

ஜி. ஸி. ஈ. (சாதாரணம்) பரீட்சைகளின் முடிவுகள் இம்மாதம் 20-ம் திகதி வெளியாகுமென்று பரீட்சை இலாகா அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

கடந்த டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற இந்தப் பரீட்சைக்கு 2,11,000 மாணவர்கள் தோற்றினர்.

ஜி. ஸி. ஈ. (சாதாரணம்) பரீட்சைகளின் முடிவுகள் வெளியாவதில் ஏற்பட்ட காமதத்திற்கு, கடந்த ஜி. ஸி. ஈ, சாதாரண, உயர்தரப் பரீட்சைகள் ஒன்றாக நடைபெற்றதே காரணம் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## கணேசபுரம் கொலை வழக்கு

### சுப்ரீம் கோர்ட்டுக்கு பாரப்படுத்தப்பட்டது

சாவகச்சேரி, வியாழன்

கணேசபுரம் கொலை வழக்கை விசாரணை செய்த சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. ஹெபேர்ட் சில்வா விசாரணையின் பின்னர் வழக்கை சுப்ரீம் கோர்ட்டிற்குத் தாக்கல்செய்து எதிரிகள் இருவரையும் சுப்ரீம் கோர்ட் விசாரணைக்கு நிற்குமாறு உத்தரவிட்டுள்ளார். இவ்வழக்கில் கணேசபுரத்தைச் சேர்ந்த ஜேக்கப் என்பவரைக் கொலைசெய்ததாக தியாகராசா, சின்னையா அல்லது அருணையா இருவர் மீதும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் திரு. வி. செல்லத்தம்பியின் உதவியுடன் வழக்கறிஞர் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் ஆஜரானார்.

## பிரதமருக்கு வாழ்த்து

நல்லூர், வியாழன்

காங்கேசன்துறை தெற்கு கடயன் வசதிச் சங்கம் திரு. டட்லி சேனநாயக்கா இலங்கையின் பிரதமராகப் பதவியேற்றது குறித்து தமது மகிழ்ச்சியை அவருக்குத் தெரிவித்துள்ளது.

'தாங்கள் தேசிய அரசாங்கத்தை தலைமை வகித்து நடத்துவதற்குப் பெற்றுள்ளசந்தர்ப்பம் நாட்டின் நல்லகாலமே. எங்கள் சங்கத்தைப் போன்ற ஜனநாயகரீதியில் அமைந்த சகல சங்கங்களும் தங்களது தலைமையின்கீழ் நல்ல வளர்ச்சியுறும் என்பது எமது திண்ணமான நம்பிக்கை' என்றும் மேற்படி சங்கம் தனது செய்தியில் தெரிவித்துள்ளது.

## மகளிர்மன்ற நிர்வாகிகள்

பருத்தித்துறை வியா

அண்மையில் புலோலி கிழக்கில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட வடமராட்சி மகளிர் மன்ற நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

காப்பாளர்: திருமதி. க. அனல்ட், தலைவி: திருமதி. ச. ஸ்ரீபத்மநாதன், உப-தலைவி: திருமதி. தி. ஜீவஞயகம், காரியதரிசி: திருமதி: சா. மாணிக்கவாசகர், உப-காரியதரிசி:- செல்வி ஜெ. சுப்பிரமணியம், தனாதிகாரி:- திருமதி வி. குலத்துங்கம், உப-தனாதிகாரி:- திருமதி. சி. தங்கராசா.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 35-ம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு மே மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## சைவப் புலவர் தேர்வு முடிவுகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரால் 1964-ம் ஆண்டு நடாத்தப்பெற்ற இளஞ் சைவப் புலவர் சைவப்புலவர் தேர்வு முடிவுகள்,

**இளஞ்சைவப்புலவர்:-**

த. மாலோகமணி, இரண்டாம் பிரிவு, கை. வேலாயுதம், 2-ம் பிரிவு.

**சைவப்புலவர் :-**

இ. பரமகுரு, 1-ம் பிரிவு, த. கல்லநாயகி, 1-ம் பிரிவு, க. நடராசா, 2-ம் பிரிவு. வெ. சௌபாக்கியநாயகி, 2-ம் பிரிவு. பத்தினிப்பிள்ளை, 2-ம் பிரிவு. த. தங்கமணி, 2-ம் பிரிவு ச. கணபதிப்பிள்ளை, 2-ம் பிரிவு ஈ. கலாநதினம், 2-ம் பிரிவு. சி. இராசேஸ்வரி 2-ம் பிரிவு வை. தையல்நாயகி, 2-ம் பிரிவு,

**நூனசித்தி பெற்றோர்**

சிவகிலி கதிரவேலு (இலக்கணம் - தருக்கம் சமஸ்கிருதம்) க. கதிரவேலு (இலக்கணம்-தருக்கல் சமஸ்கிருதம்) நா. சந்திரசேகரம் (இலக்கணம்-தருக்கம் சமஸ்கிருதம்) பொன்னம்மா வல்லிபுரம் (இலக்கணம் - தருக்கம் சமஸ்கிருதம்) ஆ. இரத்தினசபாபதி (இலக்கணம் - தருக்கல் சமஸ்கிருதம்.

## விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, வெள்ளி

மே தினத்தன்று காயங்களுடன் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின் மரணமடைந்த கூட்டுறவுமொத்த ஸ்தாபனத்தின் ஊழியரான எச். பி. சிறிசேன (25 வயது) வின் மரண விசாரணை இன்று கொழும்பு பெரியாஸ்பத்திரியில் நடைபெற்றது.

டாக்டர் (செல்வி) சாமுவேல் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

மே தினத்தன்று மாலை காலமானவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். தலையில பலமான காயம் ஏற்பட்டிருந்தது. மதுபானத்தின் வாசனை அப்போது அவரிடத்திலிருந்து வீசியது. சனிக்கிழமை அனுமதிக்கப்பட்ட அவர் திங்கள் மாலை 7-45க்கு மரணமடைந்தார்,"

மூளையில் ஏற்பட்டபலமான காயத்தின் விளைவாகத்தான் மரணம் சம்பவித்துள்ளது என பிரேத பரிசோதனை செய்த டாக்டர் டி. எல். பெர்னாண்டோ தெரிவித்தார்.

மரணவிசாரணையின் போது கொரளை எம். பி. திரு. ரத்தானசிறி சமுகமளித்திருந்தார்,

## சமூக விரோத நடவடிக்கைகள்

### சென்னையில் பலர் கைது

சென்னை, மே 6

சமூகவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட குற்றத்துக்காக சென்னையில் நேற்று 49 பேரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இப்படியான நடவடிக்கைகளில் ஈடுபட்ட குற்றத்துக்காக ஏற்கனவே பலர் கைதுசெய்யப்பட்டு சிறைவாசம் அனுபவிக்கின்றனர்.

நேற்று கைதுசெய்யப்பட்டவர்கள் இரண்டு மூன்று தினங்களில் சிறைக்கு அனுப்பப்படுவார்கள்என்று சென்னை பொலிஸார் அறிவித்துள்ளனர்.

கொழும்பு, வெள்ளி

கொழும்பில் கடந்த மூன்று தினங்களாக பலத்த மழை பெய்கிறது. தாழ்ந்த பகுதிகளில் சிறுவெள்ளம் வரலாம் என அஞ்சப்படுகிறது. இதனால் கல்லூரிக்குச் செல்லும் மாணவர்களும் வேலைகளுக்குச் செல்வோரும் பெரிதும் கஷ்டத்திற்குள்ளானார்கள். [illegible] இங்கே தனியாக மக்கள் பார்வைக்கு [illegible]

## காதலியை கொன்றுவிட்டு தானும் தற்கொலை

யாழ்ப்பாணம், சனி

அக்கராயன் குளத்தைச் சேர்ந்த நாகப்பன் சங்கரன் என்பவர் தனது காதலி ஜானகியை கத்தியால் குத்திவிட்டு தானும் தற்கொலை செய்து கொண்டார்.

கத்தியால் குத்தப்பட்ட ஜானகி, யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

மரணவிசாரணை நடத்திய திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. மு. யோகலிங்கம் முன்னிலையில் ஜானகியின் சகோதரன் சாட்சியமளித்த போது கூறியதாவது: எனது சகோதரியை சங்கரன் திருமணம் செய்ய நிச்சயித்திருந்தார். ஆனால் காலம் சென்றவரிடம் போதிய பணமில்லை என்ற காரணத்தினால் நாங்கள் இத்திருமணத்திற்கு சம்மதிக்கவில்லை.

காதலுக்கும் பணத்திற்கும் ஒரு தொடர்புமில்லை யென்று தெரிவித்து இத்திருமணத்திற்கு சம்மதிக்காததையிட்டு மரண விசாரணை அதிகாரி எச்சரித்தார். விசாரணைமுடிவில் தற்கொலை எனத்தீர்ப்பளிக்கப்பட்டது.

## நிவாரணமளிப்பது பற்றி புகார்

யாழ்ப்பாணம், வெள்ளி

பயல் காற்றினால் வீடு, பயிர், குடிசைகள் சேதமடைந்த வலவியாய் பகுதியிலுள்ள அனேக விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைக்காமல் அவதியுறும் மக்களுக்கு நிவாரணமளிக்கும் முகமாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதிகள் சமூக சேவா அதிபர் டாக்டர் ஆ. எல். திருச்செல்வத்தை அவரது காரியாலயத்தில் பேட்டி கண்டு பிரச்சினைகளை விளக்கினர்.

நிவாரணமளிக்கும் விஷயத்தில் இன்று அப்பகுதியில் குடியிருப்பவர்களுக்கு ஏற்பட்ட சேதங்களில் ஒரு பகுதியினருக்கு உதவி கொடுத்து பெரும் பகுதியினருக்கு நிவாரணம் கொடுபடாமலிருப்பதே இன்று மக்களுக்குள் நிலவும் அதிருப்தியெனறு சுட்டிக்காட்டினர். இது பாகுபாடு செய்யாத புகார் செய்வதற்கு இடமளிக்கிறதென்றும், இதற்கு உடன் பரிகாரமளிக்கவேண்டுமென்றும் வற்புறுத்தியுள்ளார்கள்.

## தீவில் காயங்களுடன் இறந்து கிடந்தார்

யாழ்ப்பாணம் சனி

புங்குடுதீவைச்சேர்ந்த கந்தர் ஏகலிங்கம் என்பவர் கீரிமலைச்சியிலுள்ள 5-ம் வாய்க்காலில் தலையில் காயங்களுடன் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

இறந்தவரின் மரணம் சம்பந்தமாக மரணவிசாரணை அதிகாரி திரு மு. யோகலிங்கம் மரண விசாரணை நடத்தினார். இறந்தவரின் புதல்வியும் மருமகனும் சாட்சியமளித்தினர். மரண விசாரணை அதிகாரி பொதுத்தீர்ப்பு வழங்கி மரண சம்பந்தமாக புலன் விசாரணை செய்யுமாறு பொலிசாருக்குக் கட்டளையிட்டார்.

### இராமநாதன் இசைக்கல்லூரிசன்னுங்கம்

அதிபர்: மகாராஜபுரம் V. சந்தானம். 14-5-65-ல் கல்லூரி திறக்கப்படும். வாய்ப்பாட்டு, வாத்தியங்கள் கற்க எல்லா வகுப்புகளிலும் இடமுண்டு. விடுதி வசதிகளுமுண்டு. விபரங்கள் அறிவது: செயலாளர், 161, கோயில் றோட், யாழ்ப்பாணம். 288

## இராமநாதன் இசைக்கல்லூரி

யாழ்ப்பாணம், சனி

இராமநாதன் இசைக் கல்லூரிச் செயலாளர் திரு எஸ். செல்வநாயகம் எழுதுவதாவது: இராமநாதன் இசைக்கல்லூரி கலாநிலைச்சென்ற திரு எஸ். நடேசபிள்ளையினால் 1960-ம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது.

கர்நாடக சங்கீதத்தில் பயிற்சிபெற விரும்புவோர்க்கு சிறந்த சங்கீத ஞானத்தை வளர்த்து மேலும் சங்கீதத்துறையில் அறிவு பெற விரும்புவோரை இந்தியாவிற்கு அனுப்புவதற்கும், கர்நாடக சங்கீதத்துறையில் ஆசிரியர்களை உண்டாக்குவதுமே இக்கல்லூரியின் நோக்கமாகும்.

இந்தஇசைக்கல்லூரியின் அதிபராக மகாராஜபுரம் வி. சந்தானம் நியமிக்கப் பட்டுள்ளார். அவர் இசையில் புகழ்பெற்ற மகாராஜபுரம் விஸ்வநாத ஐயரின் புத்திரராவர் இதப்பரம்பரையில் சங்கீதத்திறமையுடனும் சிறந்த பயிற்சியுடனும் தோன்றியவர் தான் திரு சந்தானம் அவரின் கீழ் பயின்ற பலர் 4வருட படிப்பை முடித்து 'டிப்ளோமா' பட்டத்திற்காக பரீட்சையின் பெறுபேறுகளை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றனர்.

இப்பரீட்சைச்சபையில் இந்தியாவிலுள்ள ஓர் சிறந்த சங்கீதவித்வான்களரையும்சேர்த்துக் கொள்ள உத்தேசித்துள்ளோம். ஆரம்ப கனிஷ்ட, சிரேஷ்ட 'டிப்ளோமா' மாணவர்களுக்கு வாய்ப்பாட்டு, வாத்தியங்கள் கற்க எல்லா வகுப்புகளிலும் இடமுண்டு, பெண்களுக்கு விடுதி வசதிகளுமுண்டு போதியளவிற்கு இத்துறையில் ஆதரவிருப்பின் யாழ்ப்பாணத்திலும் வகுப்புக்கள் ஆரம்பித்து இசைவளர்ச்சியை பெருக்க உத்தேசித்துள்ளோம்,

## மழையினால் போக்குவரத்துதடை

கொழும்பு, வெள்.

வடமேற்கு, மேற்கு, தென் மாகாணங்களில் பல இடங்களில், நேற்று முன் தினம் தொடர்ந்து பெய்த மழையினால் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. ஆனால் உடனடியாக நிவாரணமளிக்கக் கூடியவகையில் பெருவெள்ளம் ஏற்படவில்லையென் சமூக சேவை இலாகா வட்டாரங்கள் தெரிவித்துள்ளன,

சமூக சேவை இலாகா வட்டாரங்கள் தொடர்ந்து நிலைமையை மிகவும் கவனமாக அவதானித்துவருகின்றன. நிலைமை மேற்பட்டால் ஒவ்வொரு மாகாணத்திலும், அரசாங்க அதிபரும், சமூகசேவை இலாகாவும் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்கள்.

கொழும்பு நகரிலுள்ள பள்ளத்தாகுப் பகுதிகளில் நேற்று 6 அங்குல மழை பெய்துள்ளது. இன்று தொடர்ந்து மழை பெய்தால், வனாத்தமுல்லையிலுள்ள 500 குடும்பங்களுக்கு உடனடியாக நிவாரணமளிக்க வேண்டிய நிலை ஏற்படலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது,

மழையின் காரணமாக போக்குவரத்து தடைப்பட்டுள்ளதால், சட்டவிரோத குடியேற்றக்காரர்கள், இந்தியா செல்ல முடியாது தடைப்பட்டுள்ளார்கள்,

## மூதாட்டி தற்கொலை

புஜபிட்டியா, வெள்ளி

ஐந்து குழந்தைக்கு தாயான 70 வயதுடைய மெனிக்கா என்பவர் கிணற்றில் குதித்து தற்கொலை செய்துகொண்டார். மரணவிசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org